Published on 14, Jan-2025 ISSN: 3049-2688 (Online)

# மூன்றாம் உலகப்போர் புதினம் உணர்த்தும் விவசாயிகளின் நிலை

திருமதி சூ. ஜோஸ்பின் மாலதி
முதுகலைதமிழ்த்துறை, உதவிப்பேராசிரியர்
வே. வ. வன்னியப்பெருமாள்
பெண்கள் கல்லூரி, விருதுநகர்.
செல்வி. கோ. யோகப்பிரியா
முதுகலைதமிழ்த்துறை, உதவிப்பேராசிரியர்
வே. வ. வன்னியப்பெருமாள்
பெண்கள் கல்லூரி, விருதுநகர்

## முன்னுரை

வேளாண்மை நமது நாட்டின் கலாச்சாரம். இன்று நமது நாட்டின் கலாச்சாரமான வேளாண்மையும் கலாச்சாரக் காவலர்களான விவசாயிகளும் பாதுகாக்கப்படவில்லை. விஞ்ஞான வளர்ச்சியால், சீர்கெட்டுள்ள சுற்றுச்சூழலால் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப் பட்டுள்ளனர். மேலும், தாராளமயமாக்கல் மற்றும் தொலைநோக்குப் பார்வையற்ற பொருளாதாரக் கொள்கைகள் போன்றவற்றால் ஏழை விவசாயிகள் தற்கொலைக்குத் தள்ளப்படுகிறார்கள். அல்லது வாழ்வாதாரத்தை இழந்து சொந்த நாட்டிலேயே அகதிகளாக அல்லல் படுகிறார்கள். உழவர்களின் துயரங்களை உள்ளடக்கமாகக் கொண்ட, 'மூன்றாம் உலகப்போர் நாவலில் வைரமுத்து உழவர்களின் துயரங்களையும் அதற்கான காரணங்களையும் பதிவுசெய்துள்ளார். மேலும் அதற்கான சில தீர்வுகளையும் முன்மொழிகிறார். இவை தொடர்பான கருத்துக்கள் இக்கட்டுரையில் விளக்கப்பட்டுள்ளன.

## உழவின் பெருமை

'வேளாண்மை' என்னும் சொல்லுக்குப் பிங்கல நிகண்டு, சத்தியம், உண்மை, கொடை ஆகிய பொருள்களைச் சுட்டுகிறது. தற்பொழுது 'வேளாண்மை' எனும் சொல் விவசாயத்தொழிலை மட்டுமே குறிப்பிட்டாலும் வள்ளுவர் இச்சொல்லை 'உதவி' எனும் பொருளில் (குறள்-81) கையாண்டுள்ளார். மேலும், உழவர்களே உலகிற்கு அச்சாணி போன்றவர் என்றும் வள்ளுவர் உணர்த்துகிறார்(குறள்—1032)[1.] "மேழித் தேவர் பெருமைக்கு வேறே தேவர் கூறேனே"[2]என்று 'உலகைக் காக்கும் உழவர்களுக்குச் சமமாக வேறு எந்தத் தேவரையும் கூறமாட்டேன்', என்கிறார் கம்பர்.

பாரதிதாசனும்,

**"அறுசுவை உணவுக்கு-அவன் வாழ்ந்ததில்லை!**

**அழகிய நகருக்கு-அறுசுவை உணவை**

**வழங்குதல் அவனுக்கு வழக்கம்",**[3] என்று

உழவர் பெருமையைப் பாடுகிறார்.

"இரவார் இறப்பார்க்கொன் றீவார்". எனும் வள்ளுவரின் கருத்தைக் கவிஞர் வைரமுத்துவும் "நெலம் உள்ளவன் தானப்பா தானும் கஞ்சி குடிப்பான்; ஊருக்கும் கஞ்சி ஊத்துவான்". (மு.உ.போ-ப.174)என்று எளிய வார்த்தைகளில் வலியுறுத்துகிறார்.

விவசாயிகள் கல்வியறிவு பெறாதவர்களாக இருந்தாலும் அனுபவ அறிவு பெற்றவர்கள். ஆண்டாண்டுக் காலமாகப் பெற்ற அனுபவ அறிவின்படி வானையும் மண்ணையும் நுட்பமாக ஆய்பவர்களாக இருந்தவர்கள் நம் விவசாய முதுகுடிகள்.

*“இப்பூமியில் மனிதன் கொண்டு வந்த மிக நுட்பமான தொழில்நுட்பம் வேளாண்மை. ஒரு மூட்டை நெல்லைச் சொந்தமாக விளைவிக்க வேண்டுமென்றால் குறைந்தது 70 தொழில் நுட்பங்கள் பெற்றிருக்க வேண்டும். வானிலை அறிவு உட்பட" என்கிறார் மருத்துவர் கு.சிவராமன்”* [4]

“படிக்காத ஆளுதான், பழுத்த அனுபவம் கிராமத்து ஆளுகளுக்கு, ஆகாயமும் பூமாதேவியும் தான் பள்ளிக்கூடம்...மண்ணைக்கிண்ரே
சாதிக்குன்னு உண்டான பரம்பர ஞானமும் பட்டாவோட வந்திருக்கு. அவரு சொன்னா சொன்னபடி கேக்கும் மண்ணு எப்ப மழை வரும் எப்ப வெறிக்கும்-தெரியும். அவருக்கு. எந்த வெள்ளாமைக்கு எந்தச் சீக்கு வரும்- அத்துப்படி அவருக்கு", (மூ.உ.போ-ப.19) என்று அனுபவ அறிவு பெற்ற விவசாயியாக 'கருத்தமாயி'யை ஆசிரியர் அறிமுகப் படுத்தி யுள்ளார். ஆனால் தற்பொழுது புவிவெப்பம் அதிகரித்து வருவதின் காரணமாக இயற்கை காலங்காலமாய் விவசாயிகள் கொண்டிருந்த மரபுசார் அறிவை மறுதலிக்கிறது (மூ.உ.போ- ப.56), என்பது கவிஞரின் ஆதங்கமாக வெளிப்பட்டுள்ளது.

நவீனத்தொழில் நுட்பத்துடன் போட்டி போட முடியாமல் இயற்கையுடன் போராட முடியாமல் உழவர்கள் படும் அல்லல்களைக் கவிஞர் விரிவாக விளக்கியுள்ளார்.

## தொடரும் அவலங்கள்

உழவுத்தொழிலின் பின்னால் தான் உலகம் உள்ளது. எனவே வருந்தினாலும் உழவே சிறந்தது என்கிறார் வள்ளுவர்(குறள்-1031). ’உழந்தும்' என்ற சொல்லாட்சியின் மூலம் உழவுத்தொழில் துன்பத்தைத் தரக்கூடிய தொழிலாக வள்ளுவர் காலத்திலேயே இருந்திருப்பதை உணர முடிகிறது.

சங்கப்பாடலொன்றும்,

**"ஈரம் பட்ட செவ்விப் பைம் புனத்து**

**ஓரேர் உழவன் போல்**

**பெருவிதுப்பு உற்ற"**[5]

என்று ஒரேஒரு ஏர் கொண்டு உழைக்கும் ஏழை விவசாயின் துயரத்தைப் பதிவு செய்துள்ளது.

ஆண்டாண்டுக் காலமாய் ஏழை விவசாயி கள் அல்லல் பட்டுத்தான் வாழ்ந்து வருகிறார்கள். எனவே தான் வைரமுத்து, "கருமாயப்பட்ட பொழப்பய்யா கலப்ப பிடிச்சவன் பொழப்பு", என்று ஏழை விவசா யியாய் விரக்தியுற்றுப் புலம்புகிறார் (மூ.உ. போ-ப.34). அதிலும் இந்திய விவசாயிகளின் தீராத துயரத்தை உணர்த்தும் வண்ணம் அங்கதச்சுவையுடன் ஓர் கதை கூறுகிறார். அக்கதையில் எமதர்மன் நாரதரிடம் கூறுகிறார், "நாரதரே, பாவக்கணக்குப் பண்ணுனவக எண்ணிக்கை கூடிப்போச்சு; எடமில்லை நரகத்துல; என்ன பண்றதுண்ணு யோசிக்கறேன்". நாரதர் கூறுகிறார், "இவுகள நரகத்துல தள்ளணும் அவ்வளவு தான? நான் பறந்து பறந்து பார்த்த அளவுல பூலோகத்துல இந்தியா இந்தியான்னு ஒரு தேசம் இருக்கு. இவுகளப் பூரா அங்க வெவசாயம் பண்ண அனுப்பி வச்சீங்கன்னு வச்சுக்குங்க வேலை முடிஞ்சது".

நாரதர் சொன்ன யோசனப்படி இந்தியாவுல விவசாயம் பண்ண நரகத்துல இருந்து அன்னைக்கு அனுப்பி வைக்க ஆரம்பிச்சது. இன்னைக்கு வரைக்கும் நின்ன பாடில்ல", என்று கதை முடிகிறது (மூ.உ.போ-பக்.22-24). வைரமுத்துவின் இக்கதையை உறுதிப் படுத்தும் பல சான்றுகளை இந்திய வரலாறு பதிவு செய்துள்ளது.

## விவசாயத் துயரங்களின் வரலாறு

நம் தேசத்தந்தை காந்தியின் போராட்டங் களான சம்பரண் மற்றும் விவசாயிகளுக்கா கவே நடத்தப்பட்டன. முதல் சத்தியாக்கிரகப் கேடா சத்தியாக்கிரகங்கள் சம்பரண் மாவட் டத்தில் காலனிய அரசின் கட்டாயத்திற்காக உணவுப்பயிர்களை விடுத்து அவுரி முதலான பணப்பயிர்கள் பயிரிடப்பட்டன. மேலும் அவுரிப்பயிரினை மிகக்குறைந்த விலையில் அரசு ஆதரவு பெற்ற பண்ணையார்களுக்கு விற்க விவசாமிகள் கட்டாயப்படுத்தப் பட்டனர். 1910களில் அவர்கள் விற்கும் அவுரி மீது அரசு புதிய வரியொன்றையும் விதித்தது. இதனால் அரசுக்கு எதிராகக் கலகங்கள் விவசாயிகளின் மூண்டன. 1918 நிலை காந்தியின் கவனத்திற்குச் செல்லப் பட்டது. சம்பரண் வந்த காந்தி அப்பகுதி சம்பரண் கொண்டு மக்களை அறப்போராட் டத்திற்குத் தூண்டினார். இப்போராட்டத் தின் போது தான் காந்தி முதன் முதலில் "பாபூ" என்றும் "மகாத்மா" என்றும் அழைக்கப்பட்டார். இதே காலகட்டத்தில் குஜராத் மாநிலத்தின் கேடா மாவட்டத்தில் கடும் பஞ்சம் ஏற்பட்டது. நில உரிமையாளர் களால் பஞ்சத்தினால் ஏற்பட்ட இழப்பினைத் தாங்க முடியவில்லை. வரித்தள்ளுபடி

வேண்டிய அவர்களது கோரிக்கையைப் பிரிட்டன் அரசு ஏற்க மறுத்தது. இங்கும் காந்தி தலைமையில் ஒரு வரிகொடாப் போராட்டம் வெடித்தது. அவ்வாண்டுக்கான வரியினைக் கொடாத விவசாயிகளின் நிலங்களைஅரசு கையகப் படுத்தியது.

இவை, அந்நிய அரசின் வரிச்சுமையால், பொருளாதாரக் கொள்கைகளால் விடுதலைக்கு முன் இந்திய விவசாயிகள் சந்தித்த துயரங்கள். இந்தியாவின் ஆன்மாவைக் கிராமங்களில் கண்ட தேசப்பிதாவின் முயற்சியால் இப்போராட்டங்கள் வெற்றி பெற்றன. ஆனால், சுதந்திர இந்தியாவிலும் உழவர்களின் துயரங்கள்தீர்ந்தபாடில்லை. அவை புதியபரிணாமங்களுடன் தொடர்ந்து வருகின்றன என்பதை விதர்ப்பா விவசாயிகளின் அவலம் உணர்த்துகிறது,

நம்நாட்டு விவசாயிகள் தொடர்ந்து தற்கொலைக்குத் தள்ளப்படுவதைக் கவிஞர், சீனிச்சாமி குடும்பம் மற்றும் பொன்னுச்சாமி ஆகியோரின் தற்கொலைகள் மூலம் பதிவு செய்துள்ளார் (மூ.உ.போ-பக். 31&94).

கடன்சுமை காரணமாக நடக்கும் தற்கொலைகளை மனவேதனையுடன் பதிவு செய்துள்ள ஆசிரியர் இந்நூலின் மூலமாகத் தனக்குக் கிடைத்த வருவாயிலிருந்து 11 இலட்சம் ரூபாயைத் தற்கொலை செய்து கொண்ட 11 விவசாயிகளின் குடும்பங்களுக்குத் தலா ஒரு இலட்சம் ரூபாய் கொடுத்துள்ளார் என்பது இவண் குறிப்பிடத்தக்கது.

மேலாண்மை பொன்னுச்சாமி தனது 'உயிர் நிலம்' எனும் படைப்பில் முருகேசு எனும் பாத்திரம் மூலம் விவசாயத் தற்கொலையைப் பதிவு செய்துள்ளமையும் இங்கு குறிப்பிடத் தக்கது. (உயிர் நிலம்-ப.158).

### கடன் சுமைக்கான காரணங்கள்

“ஒரு விவசாயியின் மரணம் என்பது நாம் உண்ணும் உணவின் மரணம். விவசாயத்தின் மரணம் என்பது இந்தச் சமூகத்தின் மரணம். வைரமுத்து விவசாயத்தை மரணத் திலிருந்து காப்பாற்றும் முயற்சியாக விவசாயியை மரணத்தை நோக்கிச் செலுத்தும் கடன் சுமைக்கான காரணங்களை ஆராய்ந்து விளக்கியுள்ளார்.

### வஞ்சிக்கும் இயற்கை

**“வான்நின் றுலகம் வழங்கி வருதலால்**

**தான்அமிழ்தம் என்றுணரற் பாற்று.”**[6] (குறள்-11)

என மழையின் சிறப்பை உணர்த்துகிறது வள்ளுவம். ஆனால் உயிர்களுக்குச் சாவா மருந்தாகக் கருதப்படும் மழையே இன்று விவசாயிகளுக்கு எமனாக மாறிவிட்டது.

மழை ஏமாற்றுவதற்கும் பருவநிலை மாற்றத் திற்கும் முக்கியக் காரணம் அதிகரித்து வரும் புவிவெப்பம் என்று தான் ஆய்ந்து கண்ட உண்மையைக் கவிஞர் சுற்றுச்சூழல் போராளியான 'எமிலி' எனும் பாத்திரம் வாயிலாகக் கீழ்க்கண்டவாறு பதிவு செய்துள்ளார்.

"புவிவெப்பமாதலில் பருவ நிலை மாறி விட்டது என்பது உலக உண்மை. மழை அற்றுப் போவது மட்டுமல்ல பருவ நிலை மாற்றம். பகிர்ந்து பெய்ய வேண்டிய மழை ஒரே இடத்தில் ஒரே காலத்தில் கொட்டித் தீர்த்துக் குடி கெடுப்பதும் பருவ நிலை மாற்றம் தான். ஒரு பைத்தியக்காரனைப் போல முன் முடிவு இல்லாமல் நடந்து கொள்ளும் இந்தப் பருவ நிலை மாற்றத்தால் இந்திய விவசாயத்தின் மரபு வழி நம்பிக்கை உடைந்து போய் விட்டது" (மூ.உ.போ-308-09).

மரபுசார் அறிவைக் கொண்டு இயற்கையை நம்பிப் பயிர் செய்து ஏமாறும் விவசாயியின் அவலக்குரலும் பதிவு செய்யப்பட்டுள்ளது.

"காலமே மாறிப்போச்சு. பேயிற காலத்துல காயுது; காயிற காலத்துல பேயுது" (மூ.உ.போ - ப.102).

"புரட்டாசியில ஒரு மழை பேஞ்சா பூவெடுத்துரும்… மழை ஏச்சிருச்சு, புரட்டாசி கடைசிக்குக் காஞ்சு கருகிப் போச்சு கடலைச்செடி…" (மூ.உ.போ-33).

"அடுத்த கண்டம். மார்கழி மாசத்துல… கடலைச்செடியைக் காஞ்சு கெடுத்த சாமி, நெல்லுப்பயிரை பேஞ்சு கெடுத்திருச்சு " (மூ.உ.போ-ப.34).

இவ்வாறு இயற்கையால் தொடர்ந்து வஞ்சிக்கப்படும் விவசாயியை, வளமிழந்த மண்ணின் காரணமாகப் பயிர்களைத் தாக்கும் நோய்கள் அடுத்த பாணமாகத் தாக்குகின்றன.

### பயிர்களைத் தாக்கும் நோய்கள்

"எங்கிட்டுருந்து தான் வந்துச்சோ வெள்ளாமைக்கு இத்தனை சீக்கும்? வாழை போட்டா 'குழை நோய் தாக்குது. கரும்பு போட்டா 'செந்தாழை அடிக்குது', தென்னையை நட்டா 'மண்டைப்புழுவு' விழுந்து குருத்து அழிஞ்சு போகுது, 'செவட்டை' அடிச்சா செத்தே போகுது தக்காளி, கத்திரி, வெண்டை நட்டா

*'கத்தாழைச் சீக்கு. சக்கரை வள்ளிக்கெழங்கு நட்டா 'அரக்கு' அடிக்குது. 'காம்பழுகல்' நோய் வந்து மொண்ணையாய்ப் போயிருது மொளகாச் செடி"(மூ.உ.போ-ப.101).*

இவ்வாறு பல புதியநோய்கள் தாக்குவதற்கும் மண்வளம் கெடுவதற்கும் நிலத்திற்கு இடப் படும் செயற்கை உரங்களும் பூச்சிக்கொல்லி களுமே காரணம் எனும் உண்மையும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

*"ஒண்ணு போட்டாத் தொண்ணூறா வெளையிறமண்ணு இன்னைக்குச் சத்து இல்லாத சவமாப் போச்சா இல்லையா?" "எப்படியிருக்கும் சத்து? பொட்டாசு பட்டாசுன்னுபோடுறீக? என்னைக்கு நாட்டெருவு போட்டீக?*

*"எரு செஞ்ச மாதிரி இனத்தான் செய்ய மாட்டான்",* என்று இயற்கை உரத்தின் சிறப்பும் உணர்த்தப்பட்டுள்ளது*(மூ.உ.போ-ப.102).*

## ரசாயன உரங்களால் வளமிழக்கும் மண்

*"உலகப் போர்களின் எச்சம் தான் இந்த உரங்கள். முதல் உலகப்போரில் பயன் படுத்தப் பட்ட அம்மோனியா போர் முடிந்ததும் பூச்சிக்கொல்லி மருந்தாகப் புது அவதாரம் எடுத்தது. இரண்டாம் உலகப் போர் முடிந்ததில் வெடிகுண்டு தயாரிப்பில் மிச்சப்பட்ட அம்மோனிய-சூப்பர் பாஸ்பேட் போன்ற உலோக உப்புக்கள் ரசாயன உரங்களாய் ரசவாதம் பெற்றன",* என்று உரங்கள் பிறந்த கதையை இயற்கை விவசாயி யான *'இஷிமுரா'* மூலம் உணர்த்தும் படைப் பாசிரியர் அவற்றால் ஏற்படும் பாதிப்புக ளையும் அவன் வாயிலாகப் பதிவு செய்துள்ளார்.

*"சாணமும் எருவும் சாம்பலும் தழையும் குழைத்துக் குழைத்துக் கொட்டிச் செய்யப் பட்ட விவசாயம் சோதனைக்குழாய்களின் கைகளுக்குப் போய் விட்டது. மலடாகி விட்டது மண்; விஷமாகிப் போனது உணவு "(மூ.உ.போ-ப.258).*

மேலும் இரசாயன உரங்களால் மண்வளம் அழியும் செய்தி மிக விரிவாகப் பல்வேறு புள்ளிவிவரங்களுடன் விளக்கப்பட்டுள்ளது. *(மூ.உ.போ-பக்.257&289).*

## அதிகரிக்கும் உற்பத்திச் செலவு

உற்பத்திச் செல விளைச்சல் அதிகரித்து விட்டது. உழைப்பிற்கேற்ற கிடைப்பதில்லை. விளைபொருளுக்கேற்ற விலை கிடைப்ப தில்லை, எனும் ஏழை விவசாமியின் அவலக் குரல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

*"பசை உள்ளவன்தான் வெவசாயம் பண்ண முடியும்னு ஆகிப்போச்சு. ஒரு ஏக்கர் நெல்லு நட்டு எடுக்கணும்னா உசுரு போயி உசுரு வருது. சுத்துக்கால் வெட்ட ஆயிரத்து ஐநூறு, நாத்தங்காலுக்கு எழுநூறு, நாலு டிராக்டர் உழவுக்கு மூவாயிரத்து எரநூறு... ...விதை நெல்லு வேற விட்டுப்போச்சு. அது ஒரு ஆயிரத்திமுந்நூறு. இதுல பாடுபாத்து, பண்டுதம் பாத்து. களஞ்சேத்து அடிச்சுப் பாத்தா... பெருசு. அன்னைக்கு என்ன நாப்பது மூடை வந்தாப் வெலை விக்குதுங் கறது ஆண்டவனுக்குத்தான் வெளிச்சம். போட்ட கணக்கும் மூட்டக் கணக்கும் கூட்டிக் கழிச்சுப் பார்த்தா, பெண்டாட்டி வித்துத் தண்டட்டி வாங்குன கதைதான் "(மூ.உ.போ-ப.103).*

## ஆசிரியர் வைரமுத்து சுட்டும் தீர்வுகள்

கடந்த இருபதாண்டுகளில் விளை நிலம் சுருங்கி வருகிறது. விவசாயம் அருகிவருகிறது. இந்நிலையில் இந்தியா உடனடியாகச் செய்ய வேண்டிய பணிகள், 'விவசாயத்தை மீட்டெடுத்தல்-அல்லது விவசாயத்திலிருந்து விவசாயிகளை மீட்டெடுத்தல். அதற்கு இளைய தலைமுறை, மூத்ததலைமுறையின் வழிகாட்டலின் படி செயல்பட வேண்டும். படித்தவர்கள் விவசாயத்தில் ஈடுபட வேண்டும். அதற்கான விழிப்புணர்வை இளைஞர்கள் மனதில் ஊன்ற வேண்டும், என்பதே வைரமுத்துவின் அவா. இக்கருத்துக் களை வலியுறுத்துவதற்காக இளைய சமூகத் தினரின் பிரதி நிதிகளாக சின்னப்பாண்டி, இஷிமுரா, எமிலி போன்ற பாத்திரங்களைப் படைத்துள்ளார்.

## படித்தவர் கையில் விவசாயம்

தொடர்வதாகத் தன் படைப்பை விட்டுச் சென்ற வேளாண் தவத்தைத் நிறைவு செய்து ள்ளார். எம்.பி.ஏ. படித்துவிட்டு. இயற்கை விவசாயத்தில் ஈடுபட்டுவரும், *'ஏங்கல்ஸ் ராஜா'* போன்றோரின் பிரதி நிதியாக இப்பாத்திரம் உருவாக்கப்பட்டுள்ளது.

இளைஞர்களுக்கு வழிகாட்டும் வண்ணம் தானே ஓர் பாத்திரமாகவும் தோன்றி, *'திரட்டு மக்களை. செயல் படு, விளை மூலங்களை விற்கவிடாதே; விவசாயத்தை இயற்கைப் படுத்து,* என்று நெறிப்படுத்து கிறார் *(மூ.உ.போ-ப.291).*

## கால்நடை பெருக்குதல்

செயற்கை உரங்களைத் தவிர்த்து இயற்கை உரங்களுக்குத் திரும்ப வேண்டும். அதற்குக் கால் நடைகளைப் பெருக்க வேண்டும். கால் நடைகள் நாட்டின் செல்வங்கள், என்பதை உணர்த்தும் நோக்கிலேயே நம் தேசியச் சின்னத்தில் பசுவும் காளையும் இடம் பெற்றுள்ளன. எனவே ஆசிரியர் வேளாண் மையைக் காப்பதற்காக, "ஜனத் தொகை சுருக்கு, கால்நடை பெருக்கு", எனும் புதுமொழியை உருவாக்கியுள்ளார்(மூ.உ.போ-ப.290).

### இயற்கை விவசாயம்

"இந்தியா கண்டடைந்த மிகப்பெரிய தொழில் நுட்பம் இயற்கை விவசாயம்" (மூ.உ.போ-ப.289), கவிஞர் வைரமுத்துவின் இக்கருத்து தற்பொழுது பெருமளவில் ஏற்றுக் கொள்ளப் பட்டுள்ளது. இயற்கை விவசாயத்தை மீட்டெ டுக்கும் முயற்சியில், 'இயற்கை வேளாண் விஞ்ஞானி' நம்மாழ்வார், ஆறுபாதி கல்யா ணம், சுந்தரராமன், அறச்சலூர் செல்வம், 'விதை மனிதர்' ஜெயராமன், கோமதி நாயகம், கோ.சித்தர், ஆர். எஸ். நாரயணன் போன் றோர் தீவிரமாக முயன்று வருகிறார்கள்.

### பொருளாதாரப் பாதுகாப்பு

"மறுக்கப்பட்ட பொருளாதாரத்தை, சுரண்டப்படும் வாழ்க்கையை இந்திய உழவர்களுக்கு மீட்டுக் கொடுத்தால் போதும்; அவர்கள் வாழ்வுதிமிர்ந்து விடும் '(மூ.உ.போ-ப.256). இக்கருத்தினை ஆர். எஸ். நாராயண னும் வலியுறுத்துகிறார். பட்டப் படிப்பை முடித்துவிட்டு ஓர் இளைஞன் விவசாயியாக வேண்டும் என்று முடிவு செய்துவிட்டால் ஐரோப்பிய நாடுகளில் ஏராளமான மானியங் கள் உண்டு. ஐப்பானில் விவசாயத்திற்கு மானியம் உண்டு; விவசாய நிலத்தை விற்கா மல் இருக்க மானியம் உண்டு. இந்திய உற்பத் திச் செலவையாவது மானியமாக வழங்கலாம்."[7]

இவ்வாறு விவசாயத்தை வீழ்ச்சியிலிருந்து காக்க விவசாமிகளுக்குப் பொருளாதாரரீதி யான பாதுகாப்பளிக்க வேண்டும். எனும் கருத்து வலியுறுத்தப்பட்டுள்ளது.

### அடிப்படைத் தேவைகள்

விவசாயத்திற்கு அடிப்படைத் தேவை தண்ணீர். தற்பொழுது பெரும்பாலான விவசாயிகள் நிலத்தடி நீரையே நம்பியிருப் பதால் ஆழ்துளைக் கிணறுகளில் இருந்து நீரிரைக்க மின்சாரமும் முக்கியத் தேவையாகி விட்டது. இன்றைய காலகட்டத்தில் இவை இரண்டிற்குமே தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. விவசாயிகளின் பெரும் பிரச்சினைகளான இவற்றிற்குத் தீர்வு காண வேண்டியதன் அவசியமும்உணர்த்தப்பட்டுள்ளது.

' 'தண்ணீரும் மின்சாரமும் உபரியாய் உண்டாக்கப்படாத வரையில் இந்தியா வல்லரசாவது கடிது. இந்த இரண்டும் பெருகி விட்டால் இந்தியாவில் தரிசாகக் கிடக்கும் முப்பத்தெட்டு மில்லியன் ஹெக்டேர் நிலங்கள் முப்போகம் காணும்" (மூ.உ.போ-ப.311).

"உலகிலேயே தண்ணீரை அதிகம் வீணடி ப்பது இந்திய விவசாயிகள் தான்' என்பது இஸ்ரேலியர்களின் குற்றச்சாட்டு. இதனை மறுக்கும் வகையில், தண்ணீர்ப் பிரச்சினை யால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ள காவிரிப் படுகை விவசாயிகள், நிலம்+குளம்+களம்+ வனம்=வளம்,என்று புதிய திட்டத்தை முன் மொழிகிறார்கள்"[8].

இறுதியாக ஆசிரியர், "விவசாயத்தை நவீனப்படுத்த வேண்டும். இந்திய வேளாண் மரபும் நவீனத்தொழில் நுட்பமும் இணைந்து இங்கே விவசாயத்தொழிற்சாலைகள் உருவாக வேண்டும்". என்ற தன் அவாவையும் பதிவு செய்துள்ளார்(மூ.உ.போ-ப.356). இங்ஙனம் தன் படைப்பின் பாத்திரங்கள் வாயிலாகப் பல்வேறு தீர்வுகளைக் கூறியுள்ள கவிஞர் முன்னுரையிலேயே அரசுக்கும் சில வேண்டு கோள்களை வைக்கிறார். விவசாயிகள் ஒரு தேசத்தின் முதுகுடிகளாய் அறிவிக்கப்பட வேண்டும். அரசு ஊழியர்களுக்கான ஊதியப் பாதுகாப்பை விவசாமிகள் பெற வேண்டும். வரப்புகள் அழிக்கப்பட்ட கூட்டுப் பண்ணை களில் பாட்டாளிகள் பங்குதாரர்களாக வேண்டும்.

அரசு இக்கருத்துக்களைப் பரிசீலனை செய்ய வேண்டும் என்று தன் இரண்டு பேட்டி களிலும் கவிஞர் வைரமுத்து வலியுறுத்தியு ள்ளார். அமெரிக்காவின் கார்னல் பல்கலைக் கழக விஞ்ஞானியான டாக்டர் அருள் வீரப்பன், 'இந்தக் காவியத்தைப் (மூன்றாம் உலகப்போர்) படித்த அனைவரும் கீழ்க் காணும் இரண்டு உறுதி மொழிகளை எடுத்துக் கொள்ள வேண்டியது அவசியம்".[9]

1. விளை நிலங்களை விற்பதில்லை.

2. விளை நிலங்களை அழிப்பதில்லை,

என்று கூறியிருப்பது இந்நூல் மக்களிடையே ஏற்படுத்தியுள்ள தாக்கத்திற்கு ஓர் சான்றாக அமைகிறது. விவசாயத்தை, விவசாயிகளை

ISSN: 2320-4842 (Print) ISSN: 3049-2688 (Online)

மீட்டெடுக்கும் முயற்சியில் பல்வேறு தரப்பினரும் தொடர்ந்து செயல் பட்டு வருவதும் நம்பிக்கையூட்டுவதாக உள்ளது.

## விவசாயத்தை மீட்டெடுக்கும் முயற்சிகள்

"வேளாண்மை தோற்று உணவு அரிதாகுமிடத்து மீண்டும் நரமாமிசம் என்ற அநாகரிகம் மனிதகுலத்தை ஆட்கொள்ளலாம்; அது நிகழாது என்று மறுக்க முடியாது." என்று ஆசிரியர் தமது நூலின் முன்னுரையிலேயே, உலகு சந்திக்கப் போகும் பயங்கரத்தைப் பதிவு செய்துள்ளார். எதிர்கால மக்களை இத்தகைய அபாயத்திலிருந்து காக்கும் முயற்சியில் பல்வேறு அறிஞர்கள் வருகின்றனர். எவ்வளவு வறட்சி வந்தாலும் மழை வந்தாலும் தாக்குப் பிடிக்கும் நம் மண்ணுக்கே உரிய பாரம்பரிய நெல்ரகங்களை மீட்டெடுக்கும் முயற்சியில் ஜெயராமன் வெற்றி பெற்றுள்ளார். 'கிரியேட்' எனும் அமைப்பு விவசாயிகளுக்குப் பாரம்பரிய விதைகளோடு இலவசமாக அளிக்கிறார்."

இளைய சமுதாயத்தினரிடம் விழிப்புணர்வை ஊட்டும் செயல்களில் அறச்சலூர் செல்வம் ஈடுபட்டுள்ளார். 'இயற்கை வேளாண் விஞ்ஞானி" நம்மாழ்வாருடன் இணைந்து பல்வேறு விழிப்புணர்வுக் கருத்தரங்குகள். பயிற்சி வகுப்புகள், ஊர்வலங்கள் போன்றவற்றை முன்னடத்திச் செல்கிறார். வேளாண்மையின் சிறப்பை இளஞ்சிறார்கள் மனதில் பதியவைக்கும் எண்ணத்தில், கேரளாவின் கூத்துப்பரம்பு என்ற ஊரிலும் தமிழ் நாட்டின் குரும்பம் பாளையம் என்ற கிராமத்திலும் பள்ளி வளாகத்திலேயே மாணவர்களுக்கு விவசாயம் கற்றுக் கொடுக்கப்படுகிறது.

இத்தகைய செய்திகள் விவசாயத்தை, விவசாயியை மீட்டெடுக்க வேண்டுமென்ற ஆசிரியர் வைரமுத்துவின் எதிர்பார்ப்பு விரைவில் நிறைவேறும் என்ற நம்பிக்கையூட்டுவதாக உள்ளன.

## தொகுப்புரை

நாடோடிக் கலாச்சாரத்திலிருந்து மனிதனை மீட்டெடுத்த வேளாண்மைக் கலாச்சாரத்தின் சிறப்பு உணர்த்தப்பட்டுள்ளது. உடலையும் அனுபவ அறிவையும் மட்டுமே மூலதனமாகக் கொண்டு உழைக்கும் கிராமப்புற உழவர்கள் காலம்காலமாய்ச் சந்தித்து வரும் இன்னல்களின் வரலாறு உணர்த்தப் பட்டுள்ளது. இந்தியாவில் தொடர்ந்து நிகழும் விவசாயத் தற்கொலைகள், அதற்கான காரணங்கள் விரிவாக, உணர்வுப்பூர்வமாகப் புள்ளி விவரங்களுடன் பதிவு செய்யப் பட்டுள்ளன. விவசாயிகள் தங்களுடைய வாழ்வாதார மான நிலங்களை விட்டு புலம் பெயரும் அவலமும் அதற்கான காரணங்களும் விளக்கப்பட்டுள்ளன. மேலும், அவ்வாறு புலம் பெயர்ந்த விவசாயிகள் அடையும் இன்னல்களும் பதிவு செய்யப் பட்டுள்ளன. விவசாயத்தை மீட்டெடுக்க பாத்திரங்கள் வாயிலாகவும் ஆசிரியர் கூற்றாகவும் வைரமுத்து முன்மொழியும் சில தீர்வுகள் சுட்டிக் காட்டப்பட்டுள்ளன.

யதார்த்த உலகில் விவசாயத்தை இயற்கைப் படுத்தி, மீண்டும் பாரம்பரிய விவசாய முறைகளை நடைமுறைக்குக் கொண்டு வருவதற்கு பல்வேறு அறிஞர்கள் எடுத்து வரும் முயற்சிகள் எடுத்துக்காட்டப்பட்டுள்ளன.

## சான்றெண் விளக்கம்

1. கு. மங்கையர்க்கரசி, திருக்குறளில் வேளாண்மை (கட்), தமிழ் இலக்கியத்தில் அறிவியல் சிந்தனைகள்(ப.328)
2) டாக்டர். ராச கோபாலச்சாரியார், கம்பரின் ஐந்து நூல்கள் (ப.106)
3) பாரதிதாசன் கவிதைகள் (ப.242)
4) ஆனந்த விகடன் (17-10-2012)
5) (கு.தொ.131)
6) குறள்.11
7) ஆர்.எஸ். நாராயணன், விவசாயியே வெளியேறு (ப.3)
8) சுவாமிமலை சுந்தர விமலநாதன், ஆனந்த விகடன் (02-01-2013)
9) புதிய தலைமுறை(13-12-2012)

## துணை நூற்பட்டியல்

1. ஆனந்தம்,வி.வி.வி, இன்னாசி முத்து,ச., மக்கள் வாழ்வில் மரங்கள், கங்கை புத்தகநிலையம், -600 017.
2. சுற்றுச்சூழல் மாசுக்கட்டுப்பாடும் விழிப்புணர்வும், வானதி பதிப்பகம், -600 017.
3. கவிதா, ஆர்(தொ.ஆ) குமாரசாமி, கு., அழகப்பா போஸ், அ., வசந்தி,கு., குலோத்துங்கன், ஆறாம் பதிப்பு, பிப்-2011
4. தமிழ் இலக்கியத்தில் அறிவியல் சிந்தனைகள், கட்டுரைகளின் தொகுப்பு முதல் பதிப்பு, டிசம்-2003 சுற்றுச்சூழல் பதிப்புத் துறை,
5. பாரதிதாசன் பல்கலைக்கழகம்,-620024, ஏழாம் பதிப்பு, ஆகஸ்ட்-2008, மானுட யாத்திரை பாகம்:1 (சமுதாயம், அரசியல்), பாரதி பதிப்பகம், & 600617.